பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

**09 07 2026 THURSDAY 6.30 PM**

**மாநிலச்செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1) வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில், நாடு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) புத்தாக்க தொழில்துறையில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது என்று உலக முதலீடு ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) திருநெல்வேலியில் உள்ள சிப்காட் தொழில்பூங்காவில் மின்கல உற்பத்தி ஆலை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு விஜய் முன்னிலையில் இன்று சென்னையில் கையெழுத்தானது.

4) காவிரியில் தமிழகத்திற்கு உரிய தண்ணீரை பெறுவதற்கு மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

5) ஸ்பெயின் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Madhurima Sawant** — இங்கிலாந்தின் **Summer Yardley** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள் —

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டும் வகையில், நாடு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் இந்திய வம்சாவளியினரிடையே இன்று உரையாற்றிய அவர், இதற்காக ஆற்றலுடன் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தமது உரையை வணக்கம் மெல்போர்ன் என்று கூறி பிரதமர் தொடங்கினார்.

***(Sound Byte — பிரதமர் - 8 Sec. )***

சிட்னி மற்றும் மெல்போர்ன் நகரங்களில் இந்திய வம்சாவளியினரிடம் உரையாற்றியது மகிழ்ச்சி அளிப்பதாக அவர் கூறினார்.

ஆஸ்திரேலியாவுக்கு கடந்த 12 ஆண்டுகளில் தாம் மேற்கொண்ட மூன்றாவது பயணம் இது என்று கூறிய அவர், இருநாடுகளுக்கு இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதை இது எடுத்துக்காட்டாக உள்ளது என்று தெரிவித்தார்.

உலகிலேயே மிகப்பெரிய கிரிக்கெட் மைதானம் உள்ள அகமதாபாதும், வரலாற்று சிறப்பு மிக்க கிரிக்கெட் மைதானம் உள்ள மெல்போர்னும் கிரிக்கெட் மூலம் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஆஸ்திரேலிய பிரதமர் திரு ஆன்டனி அல்பெனிஸ், இருநாட்டு மக்களின் ஆற்றல் மூலம் இந்தியா — ஆஸ்திரேலியா இடையேயான உறவுகள் மேம்பட்டு வருவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>>

புத்தாக்க தொழில்துறையில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக உலக முதலீட்டு ஆய்வறிக்கை தெரிவிப்பதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மென்பொருள், ஆராய்ச்சி மேம்பாடு, புத்தாக்கம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் முதலீடுகள் அதிகரித்து வருவதாக தெரிவித்துள்ளார்.

நாட்டின் இளம் புதுமை கண்டுபிடிப்பாளர்கள், தொழில் முனைவோர் உள்ளிட்டோரின் ஆற்றல் மூலம் இந்தியா உலகிலேயே மிக அதிகமாக வளர்ச்சியடையும் சக்தியாக உருவெடுத்துள்ளதாக கூறியுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, நிலையான வளர்ச்சி, டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை, புத்தொழில் நிறுவனங்கள் தொடங்குவதற்கு அனைத்து உதவிகளையும் வழங்கி வருவதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

திருநெல்வேலி மாவட்டம் கங்கைகொண்டான் சிப்காட் தொழில்பூங்காவில் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்புகளுக்கான உற்பத்தி ஆலை தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் முதலமைச்சர் திரு விஜய் முன்னிலையில் இன்று கையெழுத்தானது.

15 ஆயிரத்து 37 கோடி ரூபாய் முதலீட்டில் தொடங்கப்படும் இந்த ஆலையின் மூலமாக இரண்டாயிரத்து 670 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

சென்னை தலைமைச்செயலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின்போது, மாநில தொழில்துறை அமைச்சர் செல்வி கீர்த்தனா, தலைமைச்செயலர் திரு சாய்குமார், முதலீட்டு ஊக்குவிப்பு வர்த்தகத்துறை கூடுதல் செயலர் திரு விஜயகுமார் உள்ளிட்டோரும் உடனிருந்தனர்.

<<<<<>>>>>>

மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்கு மாநில அரசு முன்னுரிமை அளித்து வருவதாக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு சம்பத் குமார் தெரிவித்துள்ளார்.

லால்குடி சட்டப்பேரவைத் தொகுதியில் சிறுபான்மையின மக்களுக்கான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய அவர், இந்த திட்டங்களுக்கு போதிய நிதியுதவியை அரசு விடுவித்து வருவதாகவும் கூறினார்.

அரசு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கு தேவையான நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

சுயதொழில் தொடங்க தேவையான உபகரணங்களை அரசு வழங்கும் என்றும் அவர் கூறினார்.

கோவை அரசு மருத்துவமனையில் எலிகள், பெருச்சாளிகள் தொல்லைகளை கட்டுப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திரு சம்பத்குமார் கூறினார்.

<<<<<>>>>>>

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் நடப்பாண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையில் இடம்பெறும் என்று மாநில வேளாண் அமைச்சர் திரு வினோத் தெரிவித்துள்ளார்.

வேலூரில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளுக்கான நலத்திட்டங்கள் மட்டுமின்றி, மண்வள மேம்பாடு மற்றும் வேளாண் சாகுபடிக்கான உதவித் திட்டங்களும் இதில் இடம்பெறும் என்று தெரிவித்தார்.

தமிழகத்தில் 131 லட்சம் மெட்ரிக்டன் உணவு தானிய உற்பத்திக்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

எல்-நினோ வெப்ப அலை தாக்கத்தால் குறுவை மற்றும் மானாவரி பயிர்கள் பாதிக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், உதவித்தொகை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நெல் கொள்முதல் நிலையங்களில் உள்ள சிக்கல்கள் மற்றும் காலதாமதத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், நெல் கொள்முதல் பணிகளை அரசு துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் கூறினார்.

காவிரியின் குறுக்கே மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்த தமிழக அரசு சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் என்று திரு வினோத் தெரிவித்தார்.

<<<<<>>>>>>

காவிரியில் தமிழகத்திற்கு உரிய தண்ணீரை பெறுவதற்கு மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடக நீர்பாசனத்துறை அமைச்சர், தமிழகத்திற்கு தண்ணீர் தர முடியாது என்று கூறுவதையும், காவிரி மேலாண்மை ஆணையம் தண்ணீர் தர உத்தரவிடவில்லை என்று கூறுவதையும் ஏற்க முடியாது என்றும் கூறியுள்ளார்.

உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதலின்படி கர்நாடக அரசு தமிழகத்திற்கு உரிய காவிரி நீரை கட்டாயம் தர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மக்களின் வாழ்வை பாதிக்கும் வகையில், கர்நாடகா மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கையையும் மாநில அரசு வேடிக்கை பார்க்கக் கூடாது என்றும், காவிரி நதிநீர் தீர்ப்பாயம் மற்றும் உச்சநீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் தமிழகத்திற்கான தண்ணீரை

பெறுவதற்கு முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

<<<<<>>>>>>

கோவை அரசு மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவில் எலித் தொல்லையை கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசை, பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மருத்துவமனையில் எலிகள் அதிக அளவில் இருப்பதால், சுகாதார சீர்கேடுகள் ஏற்படுவதாகவும் இதனால் ஏழை எளிய மக்களின் உடல்நலன் அதிக பாதிப்புக்கு உள்ளாவதாகவும் கூறியுள்ளார்.

எலிகளால் பல புதிய தொற்று நோய்களும், உபாதைகளும் ஏற்படும் பேராபத்து உருவாகியிருப்பதாகவும், மருத்துவமனை வளாகத்தை தூய்மையாக பராமரிக்க தவறிய மருத்துவமனை நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கு பாதுகாப்பை உறுதி செய்ய மாநில அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<>>>>>>

கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஒரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென் மண்டல இயக்குநர் டாக்டர் வி ஆர் துரை தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — வி ஆர் துரை - 35 Sec. )***

இதனிடையே, சென்னையில் பல்வேறு இடங்களில் பரவலாக இன்று மாலை மழை பெய்தது.

<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையில் செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜீவ் தலைமையில் சென்னையில் இன்று நடைபெற்றது.

-----------------

மதுரை மாவட்டம் வெங்கடா ஜலபுரத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கிடங்கில் ஆட்சியர் திரு நிஷாந்த் கிருஷ்ணா இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------

கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் செயல்பட்டுவரும் அங்கன்வாடி மற்றும் தொடக்கப்பள்ளிகளில் சத்துணவு கூடங்களை ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஸ்பெயினில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Madhurima Sawant** — இங்கிலாந்தின் **Summer Yardley** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை **7-6, 7-5** என்ற செட் கணக்கில், ஸ்பெயினின் **Judith Miranda** — ஆஸ்திரேலியாவின் **Naomi** இணையை வென்றது.

-------------

இந்தியா - இங்கிலாந்து இடையேயான நான்காவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி, இன்று நடைபெறவுள்ளது.

**Bristol-**ல் இப்போட்டி இரவு பத்து மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<END>>>>>>**